முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தமிழ்நாடு வணிகர் நல வாரிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நேற்று (23.07.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் தான் வணிகப் பெருமக்களின் நலனுக்காக "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" என்ற அமைப்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வணிகர் நல வாரியம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை தலைவராக கொண்டும், வணிக வரித்துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராக கொண்டும் இயங்கி வருகிறது. இவ்வமைப்பின் கீழ் வணிகவரி மற்றும் பதிவுத் துறை செயலாளர், வணிகவரி ஆணையர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் மற்றும் உறுப்பினர் செயலராக வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலர் ஆகியோர் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இவ்வாரியம் உருவாக்கப்பட்ட போது 20 அலுவல்சாரா உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருந்தது. தற்போது, வளர்ந்து வரும் வணிகத்தை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களால் அலுவல்சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கை 20லிருந்து 30 ஆக உயர்த்தி அரசாணை 7.7.2023 அன்று வெளியிடப்பட்டது.

இவ்வாரியம் வணிகர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், வாரியத்தின் நிர்வாக செலவினங்களுக்காகவும் தொடக்கத்தில் 1989இல் ரூ. 2 கோடியை "திரட்டு நிதியாக" (Corpus Fund) கொண்டு தொடங்கப்பட்டது. பின்னர் இந்நிதி 2012ல் ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டு, 2017ல் இவ்வாரியத்தின் திரட்டு நிதி ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டது. நாளது தேதியில் ரூ.4.05 கோடி திரட்டு நிதி கையிருப்பு உள்ளது.

**மேலும், இவ்வாரியத்தின் கீழ் நடைபாதை வணிகர்கள் அல்லாமல், தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள சிறு வணிகர்களும் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற உரிமத்தின் அடிப்படையில் ஒரு முறை மட்டும் ரூ.500/ கட்டணமாக செலுத்தி உறுப்பினர் ஆகலாம் என கொண்டுவரப்பட்டது.**

**கட்டணமின்றி உறுப்பினர் சேர்க்கை:**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தது போல், வணிகர் நல வாரியத்தை சீரமைத்து உறுப்பினர் சேர்க்கையை செம்மைப்படுத்தி, திறம்பட செயல்படும் வகையில், சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இந்த வாரியத்தின் மூலம் நலத்திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தில் பதிவுபெற்று "விற்று முதல் அளவு" (Turn Over) ரூ.40 இலட்சத்திற்கு உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர, சேர்க்கைக் கட்டணத்தொகையான ரூ.500/ஐ வசூலிப்பதிலிருந்து மூன்று மாதங்களுக்கு விலக்களித்து முதலமைச்சர் அவர்களால் 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யும் அனைத்து புதிய சிறு மற்றும் குறு வணிகர்களுக்கு சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு வணிகப் பேரமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று இச்சேவையை 31.03.2022 வரை கால நீட்டிப்பு செய்து முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இதன் பயனாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்யும் அனைத்து புதிய சிறு வணிகர்களுக்கு சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்க ளிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையின் வாயிலாக 40,994 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல



வாரியத்தில் இணைந்துள்ளனர்.

**இன்று வரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம்/தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 88,219 ஆகும்.**

**தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் வழங்கப்படும் நல திட்ட உதவிகள்:**

**1. குடும்பநலத் திட்டம்**

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் இயற்கை எய்த நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு உதவி தொகையாக ரூ.1,00,000/ வழங்கப்பட்டு வந்தது.

**தற்போது இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 30.05.2022 நாளிட்ட அரசாணையின்படி இந்த உதவித் தொகையானது ரூ.3,00,000 / ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

**இத்திட்டத்தின் கீழ் இதுவரை 390 உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூ.142.45 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.**

**2. தீ விபத்து**

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினரின் வியாபார தலத்தில் தீ விபத்து ஏற்பட்டால் முன்னர் ரூ.5,000/ வழங்கப்பட்டு வந்தது.

**தற்போது கழக அரசு பதவியேற்ற பிறகு ரூ. 5,000/ ஆக இருந்த தொகையானது 30.5.2022 நாளிட்ட அரசாணையின்படி ரூ. 20,000/ ஆக உயர்த்தப்பட்டுள்ளது.**

**இத்திட்டத்தின் கீழ் இதுவரை 29 உறுப்பினர்களுக்கு ரூ.1.45 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.**

**3. திருமண உதவி**

வாரிய உறுப்பினர்களுக்கு திருமண உதவி தொகையாக ரூ. 5,000/ வழங்கப்பட்டு வந்தது. **தற்போது இவ்வரசு பொறுப்பேற்றப் பிறகு 16.11.2021 நாளிட்ட அரசாணையின்படி** உறுப்பினரின் திருமணம், உறுப்பினரின் மகள் / மகன் திருமணம், உறுப்பினரின் மகள் கைம்பெண் திருமணம் ஆகியவற்றிற்கு திருமண உதவித் தொகை ரூ.10,000/ ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**4. விபத்துக்கால உதவி**

இவ்வரசு பொறுப்பேற்றப் பின் விபத்துக்கால உதவித் திட்டம் துவங்கப்பட்டு, அதன்படி வணிக நல வாரிய உறுப்பினருக்கு விபத்து நேர்ந்தால் இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,000/ வழங்கப்பட்டு வருகிறது.

**5. மருத்துவ உதவி**

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவ சான்றின் பேரில் ரூ.50,000/வழங்கப்படுகிறது.

இதயம், சிறுநீரகம் மற்றும் புற்றுநோய்களுக்குரிய சிகிச்சைகளான ஆன்ஜியோபிளாஸ்ட், டயாலிசிஸ், கீமோதெரபி, மற்றும் ரேடியேஷன்தெரபி ஆகியவைகளுக்கு ரூ.15,000/ வழங்கப்படுகிறது. இச்சிகிச்சைகளுக்குப் பிறகு அறுவை சிகிச்சை செய்து கொள்ள நேரிட்டால் அதற்கும் ரூ.25,000/ வழங்கப்படுகிறது. இது தவிர, பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/ வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 52 உறுப்பினர்களுக்கு ரூ.13.11 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**6. கல்வி உதவி**

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் ஆயுட்காலத்தில் அவரது பிள்ளைகளில் ஒருவருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் கல்லூரி கல்விக்கு ரூ.5,000/ம், தொழிற்கல்விக்கு ரூ.10,000/ம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 94 உறுப்பினர்களுக்கு ரூ.3.26 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**7. உறுப்பினரின் வாரிசுகளுக்கு விளையாட்டு நிதி உதவி**

சர்வதேச அளவில், தேசிய அளவில், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகையாக முறையே ரூ.25,000/, ரூ.10,000/, ரூ.5,000/ மற்றும் ரூ.3,000/ வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2 உறுப்பினர்களுக்கு ரூ.15 ஆயிரம் நலத் திட்ட உதவியாக வழங்கப் பட்டுள்ளது.

**8.நலிவுற்ற வணிகர்களுக்கு நிதி உதவி**

"நலிவுற்ற வணிகர்கள்" என உதவி கோரி ஒவ்வொரு ஆண்டிலும் வாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் முதல் பத்து விண்ணப்பங்களுக்கு, கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக் கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டி (Tri Cycle) வாங்க ரூ.10,000/ வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றப்பின் வணிக பெருமக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு புதிய நல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் முனைவர். டி. ஜகந்நாதன், நிதித்துறை இணைச் செயலாளர் கிருஷ்ணனுன்னி, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

ஒட்டன் சத்திரம் தொகுதிக்குட்பட்ட

# கொழுமம் கொண்டானில் 'பெரியார் நினைவு சமத்துவபுரம்' கட்டும் பணி!

## அமைச்சர் அர.சக்கரபாணி அடிக்கல் நாட்டினார்!

*திண்டுக்கல், ஜூலை 24 -*

*திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொழுமம்கொண் டான் ஊராட்சியில் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் புதிய சமத்துவபுரம் கட்டும் பணிக்கு அமைச்சர் அர.சக்கரபாணி அடிக்கல் நாட்டினார்.*

*இந்நிகழ்ச்சியில், அமைச்சர் தெரிவித்ததாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் அறிவிக்காத பல அறிவிப்புகளை அறிவித்து, அத்திட்டங்கள் பலன்கள் அனைத்தையும் கிராமப்புறத்தில் வாழும் கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைகின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.*

*ஜாதி வேறுபாடு இன்றி, அனைவரும் ஒன்றுபட்டு சகோதரத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக அனைத்து சமூகத்தினரும் ஒருங்கிணைந்து வாழ வழி வகை ஏற்படுத்தும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'சமத்துவபுரம்' திட்டத்தை கொண்டுவந்தார்.*

*மேலும் பெரியார் சிலை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நுழைவு வாயில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிலும் அமைக்கப்படவுள்ளன. இதர வசதிகளான சாலை வசதி, தெருவிளக்கு, குடிநீர் வசதி, காய்கறித் தோட்டம், சிறுவர் பூங்கா, விளையாட்டு திடல், சிறு நூலகம், நியாயவிலைக்கடை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சமுதாயக்கூடம் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளுடன் சமத்துவபுரம் அமைக்கப்படவுள்ளது. மொத்தம் ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் சமத்துவபுரம் அமைக்கப்படவுள்ளது. சமத்துவபுரத்தில் தகுதியான பயனாளிகளுக்கு இடஒதுக்கீடு அடிப்படையில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும்.*

*பொதுமக்கள் அரசின் திட்டங்களை அறிந்து, நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும், என அமைச்சர் சக்கரபாணி தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு மகளிர் சுய உதவி குழு கடன், பயிர் கடன், பட்டா, மகப்பேறு நிதி உதவி திட்டம், வேளாண்மை, தோட்டக்கலைத் துறையின் சார்பில் 88 பயனாளிகளுக்கு ரூ.1.70 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சக்கரபாணி வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பொன்ராஜ் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

---

அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் முன்னிலை! ஈரோடு மாவட்டம் - முன்னாள் எம்.பி.

# வி.பி.சண்முகசுந்தரம் நினைவேந்தல் - படத்திறப்பு நிகழ்ச்சி!

## திருவுருவப் படத்தை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

*ஈரோடு, ஜூலை 24-*

*ஈரோடு மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடி - முன்னாள் எம்.பி. கோபி வி.பி.சண்முகசுந்தரம் அவர்களின் நினைவேந்தல் - திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது என கோபி நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.நாகராஜ் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து கோபி நகரக் கழக செயலாளர்,கோபி நகராட்சி தலைவர் என்.ஆர்.நாகராஜ்*



*விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*ஈரோடு வடக்கு மாவட்ட திமுக தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வி.பி. சண்முகசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி, நினைவேந்தல் மற்றும் படத் திறப்பு விழா நிகழ்ச்சி, இன்று (24.07.2024 - புதன்கிழமை) காலை 9.30 மணியளவில், கோபி, கொளப்பலூர் முதன்மை சாலையில்( வேட்டைக்காரன் கோயில்) உள்ள, வாசு சென்னியப்பா மஹால் திருமண மண்டபத்தில், நடைபெற உள்ளது.*

*இந் நிகழ்ச்சியில், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள், தலைமையேற்று வி.பி.எஸ் அவர்களின் படத்தை திறந்து வைக்கிறார்.*

*இந் நிகழ்ச்சியில், எனது (கோபி நகர தி.மு.க. செயலாளர், கோபி நகராட்சி தலைவர் என்.ஆர்.நாகராஜ்) வரவேற்புரையில், தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.நல்லசிவம் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றுகிறார்கள்.*

*ஆகவே. இந் நிகழ்ச்சியில், மாநில, மாவட்ட, நகர நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள் வாக்குச் சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச் சாவடி நிலை முகவர்கள், கழக முன்னாள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய், தங்களை கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்
### ஜூலை 24 (2016)



**ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.**

**அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**